## இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் - 2014

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் 108(1) உப பிரிவின் பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் பல்கலைக்கழகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்**

நியமங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படாத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு அவதானிக்கப்பட்டது.

(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டிய சொத்துக்கள் கையேற்பதற்காக கிடைத்த ரூபா 187,359,260 தொகை நிதிச் செயற்பாடுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ii) மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டுள்ள நிலையான சொத்துக்களை விலைக்கு கொள்வனவு செய்வதற்குரிய காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 158,236,832 தொகை அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 09

மீளாய்வாண்டின் இறுதியில் எழுதுகருவி இருப்பினுள் 2009 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்ட பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத ரூபா 116,895 கிரயத்திலான 293 மாணவர் கைநூல்கள் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான இருப்பு மதிப்பீடு செய்தல் தொடர்பான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்கலைக்கழகத்தினால் அட்டுறு அடிப்படையில் கணக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய செலவினம் ரூபா 2,925,867 தொகையும் கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 266,104 தொகைக்காக தேவையான நிதிஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டில் செலுத்த வேண்டிய வெளிவாரி பாடநெறிக் செலவினங்களுக்காக ரூபா 345,000 மிகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன்,

மீளாய்வாண்டிற்குரிய ரூபா 181,070 தொகையான செலவினம் மிகை ஒதுக்கீட்டில் பதிவழிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் செலவினம் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) மீண்டுவரும் செலவின விடயங்களிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 305,023 கூட்டுத் தொகையான மூலதனப் பொருட்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக்கூற்றில் ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மற்றும் பட்டோலைகளுடன் ஒப்பிடும் போது கிடைக்க வேண்டிய மாணவர் உதவிப்பணம் மற்றும் கிடைக்க வேண்டிய மஹபொல என்பவற்றிற்கிடையே முறையே ரூபா 660,671 தொகை மற்றும் ரூபா 765,100 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. மேலும் முன்னைய ஆண்டிலிருந்து முன்கொண்டு வரப்படும் இனங்காணப்படாத பெறவேண்டிய மாணவர் உதவிப் பணம் ரூபா 170,321 உள்ளடக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள பின்வரும் ரூபா 4,408,295 கூட்டுப்பெறுமதியான 04 கணக்கு விடயங்கள் தொடர்பாக அவற்றிற்கு எதிரே காண்பிக்கப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்கு விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | மீளச்செலுத்த வேண்டிய வைப்புக்கள் | 1,997,840 | i. காலப்பகுப்பாய்வு |
| (ii) | மீளச்செலுத்த வேண்டிய பாதுகாப்பு வைப்புக்கள் | 647,953 | ii. தனிப்பட்ட மீதிப் பட்டியல் |
| (iii) | பொது வைப்புக்கள் - மீண்டெழும் | 1,524,607 | iii. வைப்புப் பதிவேடு |
| (iv) | பொது வைப்புக்கள் - மூலதனம் | 237,895 | |
| | மொத்தம் | 4,408,295 | |

## 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 சனவரி முதல் யூலை வரையான காலப்பகுதிக்காக மீளளிப்புச் செய்யும் அடிப்படையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியரொருவருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 93,546 தொகையான ஆராய்ச்சிக் கொடுப்பனவு அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,179,806 தொகையான இடர் கடன் மீதியில் 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது 02 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 165,183 கூட்டுத்தொகையான இடர் கடன் மீதிகளின் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 96,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதியில் 2010, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் ஏப்ரல்

மாதத்தின் போது 03 உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 10,000 தொகையான விழா முற்பணக் கடன் மீதிகள் அறவீடுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(ஈ) 2006 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மத்திய பொறியியல் உசாத்துணை பணியகத்திற்கு (CECB) செலுத்த வேண்டிய ரூபா 61,989,351 ஆன அளவை தீர்வு செய்வதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டம் | |
| (i) 37(1) ஆம் பிரிவு | குழு நிர்ணயித்த தெரிவுசெய்யும் குழுவொன்றின் பரிந்துரையின் அடிப்படையில் நிர்வாக சபையினால் பல்கலைக்கழகமொன்றின் பதிவாளர் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், நிர்வாக சபையின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு உபவேந்தரால் பணிப்பொறுப்பு அடிப்படையில் ஓய்வுபெற்ற பதிவாளர் ஒருவர் அப்பதவிக்காக நியமிக்கப்பட்டிருந்தார். |
| (ii) 108(3)(2) ஆம் பிரிவு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை அனுப்பியதன் பின்னர் மூன்று மாதங்களுக்குள் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட அல்லது எடுப்பதற்கு உத்தேசித்துள்ள நடவடிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்க வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 1958 இன் 01 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவு மற்றும் 1980 இன் 46 ஆம் | ஏற்பாடுகளின் பிரகாரம் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக எழுதுவினைஞர் மற்றும் அதற்கு சமமான தரங்களில் கடமை புரிகின்ற 28 பயிலுனர்களுக்காக பங்களிப்புத் தொகை நிதியத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| | இலக்க (ஊழிய நம்பிக்கை நிதிய) அதிகாரச்சட்டம் | |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,100,000,044 பெறுமதியான ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களுக்காக நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று முறையாக பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2003 யூன் 03 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 7.1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | பல்கலைக்கழகத்தின் பிரதான செயற்பாட்டு துறையை மேவுகை செய்யும் வகையில் செயற்பாட்டு கைநூலொன்று தயாரிக்கப்பட்டி ருக்கவில்லை. |
| (ஊ) | 2008 சனவரி 01 ஆம் திகதிய 1530/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியால் திருத்தப்பட்ட 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விசேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவு | கொடுப்பனவுப் பெறுமதி ரூபா 25,000 இற்கு மேற்பட்ட கொடுப்பனவிற்காக ரூபா 25 ஆன முத்திரைக் கட்டணம் அறவிடப்படப்பட வேண்டிய போதிலும், தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 16 சந்தர்ப்பங்களில் ரூபா 1,019,661 கூட்டுத் தொகையான கொடுப்பனவுகள் தொடர்பாக கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) | 2011 பெப்ரவரி 21 ஆந் திகதிய 449 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | பணிப்பொறுப்பு அடிப்படையிலான நியமனங்கள், 45 நாட்களை விஞ்சாத மற்றும் பணிப்பொறுப்பொன்றுக்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய தொகை ரூபா 30,000 ஆக இருந்த போதிலும், அதற்கு முரணாக பணிப்பொறுப்பு அடிப்படையில் 03 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு சுற்றறிக்கை ஏற்பாடுகளை மிகைத்து செலுத்தப்பட்ட ரூபா 718,539 தொகைக்காக அரச நிதித் திணைக்களத்தின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. |
| (ஏ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 01 ஆம் பிரிவு மற்றும் நிதிப்பிரமாணம் 758 | மீளாய்வாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் வருடாந்த பரிசோதனைக்கு மேலதிகமாக களஞ்சிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஐ) | 2010 பெப்ரவரி 05 ஆந் திகதிய 920 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 5(viii) ஆம் பந்தி | சம்பள பரிமாற்றம் மேற்கொள்ளப்படும் போது 26 பேராசிரியர்களுக்குரிய பிணைப்பொறுப்பு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஒ) | 2013 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 12/2013 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தலைவரின் தாபன சுற்றறிக்கை | சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்குரிய, தனியாள் வீடுகளில் குடியிருப்போரிடமிருந்து வீட்டு வாடகை சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஓ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவகங்களுக்கான தாபனக் கோவையின் V ஆம் அத்தியாயத்தின் 7.6 ஆம் பந்தி | பிணைப்பொறுப்பு மற்றும் உடன்படிக்கை ஒப்பந்தம் மீறியமை தொடர்பாக இரண்டு விரிவுரையாளர்களிடமிருந்து ரூபா 8,220,772 தொகை பல்கலைக்கழகத்திற்கு அறவிட வேண்டியிருந்தது. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் நிதி விளைவுகள் ரூபா 59,812,116 பற்றாக்குறையாக இருந்ததுடன், இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 123,412,661 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 63,600,545 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 1900 மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்ட கிரயம் ரூபா 457,802,863 ஆக இருந்ததுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 240,949 ஆகக் காணப்பட்டது. இதற்கு ஒப்பாக முன்னைய ஆண்டில் 1,423 மாணவர்களின் கல்விக் கிரயம் ரூபா 401,635,931 ஆகக் காணப்பட்டதுடன் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 282,246 ஆகக் காணப்பட்டது. இதன் படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ஒரு மாணவனுக்கான கிரயம் ரூபா 41,297 ஆல் குறைவடைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் நாட்டின் பல்கலைக்கழகங்களில் 1:17 என்ற சராசரி விரிவுரையாளர்கள் மாணவர் விகிதத்திற்கு ஒப்பாக பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர்கள் மாணவர் விகிதம் 1:16 ஆக இருந்தது.

(இ) கூட்டிணைந்த திட்டத்தின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக 605 மாணவர்களை இணைத்துக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 507 மாணவர்கள் மாத்திரம் அனுமதிக்கப்பட்டிருந்தனர். அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட எண்ணிக்கையில் 98 மாணவர்கள் அதாவது 16 சதவீத குறைவொன்று தென்பட்டது.

(ஈ) 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சுயமான வருமான உழைப்பு பாடநெறிகளை நடாத்தியமையால் உழைத்த வருமானம் 37 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

05/0183/035/001 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் கீழ் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தை ஸ்தாபிப்பதற்காக 2008 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற

அமைச்சரவைக் கூட்டத்தின் போது கைத்தொழில் அமைச்சிற்குரிய காணியை உயர் கல்வி அமைச்சிற்கு கையேற்பதற்காக எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்காக தற்போது ஒதுக்கப்பட்டுள்ள 30.9667 ஹெக்டேயர் காணியின் உரித்தை பல்கலைக்கழகத்திற்கு சட்டரீதியாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 நிதியத்தின் பயன்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திருத்திய பாதீட்டு மதிப்பீட்டிலிருந்து மூலதனச் செலவினத்திற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 230,000,000 தொகையான ஏற்பாட்டிலிருந்து ரூபா 71,763,168 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. அது மூலதன நிதி ஏற்பாட்டின் 31 சதவீதமாகும்.

(ஆ) தகவல் தொழில்நுட்ப அபிவிருத்தி, மாணவர் மையப்படுத்திய கற்பித்தல், முயற்சியாளர்களின் திறன் அபிவிருத்தி, வியாபார மதியுரை அலகு மற்றும் புதிய உற்பத்திப் பொருள் போன்ற 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 7,000,000 தொகையான மொத்த ஏற்பாடும் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது.

(இ) ஆராய்ச்சிகளை ஊக்கப்படுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது பாதிடப்பட்ட மூலதன ஏற்பாடான ரூபா 25,000,000 தொகையில் ரூபா 554,266 தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் ரூபா 24,445,734 தொகையான ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்ததுடன் இது மொத்த ஏற்பாட்டில் 98 சதவீதமாகும்.

(ஈ) மீளாய்வாண்டின் போது மாவட்ட செயலகம் ‘‘பதுளை’’ இனால் இழைய உற்பத்தி செயற்திட்டத்திற்காக வழங்கப்பட்ட ரூபா 3,323,000 தொகை பொது வைப்புக் மூலதன கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும், 2015 மார்ச் 31 ஆந் திகதி வரை செயற்திட்டம் செயற்படுத்தப்படவில்லை.

### 4.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டில் ஒவ்வொரு மாதமும் வெளிவாரி பாடநெறிகளிலிருந்து உழைத்த வருமானத்தில் ரூபா 10 இலட்சம் தொகையொன்று நடைமுறைக் கணக்கில் இருந்த போதிலும் அது முதலீடு செய்யப்பட்டு வட்டியை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.5 விளைவற்றதும் குறைபயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 யூன் 30 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 322,560 பெறுமதியான 05 தீக் காப்பு பெட்டகங்கள் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன.

(ஆ) 2012 ஆம் ஆண்டின் போது பொறியியல் வேலைத்தளத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 14,060,480 பெறுமதியான 3 –Axis CNC இயந்திரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(இ) வெளிவாரி பாடநெறிப் பிரிவிற்கு ரூபா 1,117,933 பெறுமதியான நிலையான சொத்துக்கள் உயர் கல்வி அமைச்சின் ‘‘ HECT ’’ செயற்திட்டத்தினூடாக வழங்கப்பட்டிருந்த போதிலும், அச்சொத்துக்கள் ஆக்கபூர்வமாக வெளிவாரி

பாடநெறிப் பிரிவின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) பல்கலைக்கழகத்தின் நிதிப் பிரிவின் நிர்வாக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்காக 2013 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 222,768 பெறுமதியான கணக்கீட்டு மென்பொருள் தற்போது காசோலை அச்சீட்டிற்காக மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றமையை காணக்கூடியதாக இருந்தது.

### 4.6 வெளிப்படையான மோசடிகள்

மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட பட்டமளிப்பு விழாவை புகைப்படமெடுப்பதற்காகவும் காணொளிப்படுத்துவதற்கும் உரிய வழங்குனர் தெரிவுசெய்தல் தொடர்பாக கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.5, 5.2.1(அ), 6.3.2, 6.3.3, 6.3.3.1 (அ) வழிகாட்டிற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், வழிகாட்டியின் 1.21 இல் குறிப்பிட்ட நோக்கங்கள் மற்றும் வழிகாட்டியின் 1.4 இல் குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதி மீறப்பட்டிருந்தது. அவ்வாறே தெரிவுசெய்யப்பட்ட வழங்குனரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலை விபரங்களின் பிரகாரம் 10''x12'' அளவிலான புகைப்படமொன்று ரூபா 100 ஆக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், பட்டதாரி அபேட்சகர்களுக்கு புகைப்படமொன்று ரூபா 336 எனும் தொகைக்கு விற்பனை செய்திருந்தமை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் ரூபா 104,784 தொகை முறையற்ற விதத்தில் உழைப்பதற்கு பல்கலைக்கழகத்தினால் உதவி ஒத்தாசை வழங்கப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக உரித்து மற்றும் உரிமை பல்கலைக்கழகத்தின் வசம் இருந்த போதிலும், அந்த உரித்து தொடர்பாக பல்கலைக்கழக நிதியத்திற்கு எந்தவொரு அறவீடொன்றையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.7 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2008 ஆம் ஆண்டின் போது ஆடைக்கைத்தொழில் கட்டிடத்திற்காக ரூபா 41,247,644 தொகை செலவு செய்து நவீனமயப்படுத்தப்பட்டிருந்த போதிலும், கூரையால் நீர் கசிவு ஏற்பட்ட காரணத்தினால் சிவிலிம் சிதைவடைந்து காணப்பட்டதுடன், மேற்படி கட்டிடத்தின் கூரை மீளாய்வாண்டின் சனவரி – ஏப்ரல் காலப்பகுதியிலும் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) நிர்மாண செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டதன் பின்னர் தேவையான அளவீட்டுப்பத்திரங்கள் (BOQ) தயாரிப்பதை சரிப்படுத்த இயலுமாக இருந்த போதிலும், தொடர்ந்தும் மத்திய பொறியியலாளர் உசாத்துணை பணியகத்தினால் (CECB) அளவீட்டுப் பத்திரங்கள் (BOQ) தயாரிக்கும் போது செலவின விடயங்களில் 50 சதவீதத்திலிருந்து 300 சதவீதம் வரை மதிப்பீடுகளில் உள்ளவாறான பெறுமதிகளுக்கிடையே வேலைகளை நிறைவேற்றும் போது விலகல் அவதானிக்கப்பட்டன.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டு 2013 ஆம் ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய 12 நிர்மாண செயற்திட்டங்கள் மீளாய்வாண்டு வரையிலும் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் மதிப்பிடப்பட்ட கிரயத்தை மிகைப்பதை குறைப்பது சிக்கலான விடயமொன்றாக இருந்தது.

### 4.8 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட கல்விசார் பதவியணியின் 213 பதவிகளில் 70 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக அதிகாரச்சட்டத்தின் vi ஆம் பகுதியின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் நூலகர் பதவி 2006 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை வெற்றிடமாக காணப்பட்டது.

(இ) பதிவாளர் பதவி 2014 மார்ச் 12 ஆந் திகதி முதல் வெற்றிடமாக காணப்பட்டதுடன், 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 37(1) பிரகாரம் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கல்விசாரா பதவியணியின் 113 பதவிகளில் 70 பதவிகளின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

(உ) பல்கலைக்கழகத்தில் 32 ஆய்வுகூடங்கள் காணப்பட்ட போதிலும், மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் 12 பதவிகளில் 10 பதவிகளை பூர்த்தி செய்வதற்கு தவறியிருந்தது.

(ஊ) 2002 சனவரி 08 ஆந் திகதிய 794 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தகைமைகளுக்கு முரணாக 2008 செப்தம்பர் 05 ஆந் திகதிய UGC/HR/1/2/452 ஆம் இலக்க நியமனக் கடிதத்தின் பிரகாரம் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(எ) கல்விசார் பதவியணியினருக்குரிய 05 விரிவுரையாளர்களின் நியமனக் கடிதத்தின் பிரகாரம் நியமனத்தை நிரந்தரமாக்குவதற்கு நியமன திகதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய கற்றல் / கற்பித்தல் முறைகள் திறன்கள் உட்பட ஊழியர் அபிவிருத்தி பயிற்சி பாடநெறி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 1982 ஏப்ரல் 06 ஆந் திகதிய 166 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கல்விசார் பதவியணியினருக்கு விரிவுரையாளர்களை நியமிப்பதற்கு உரித்தாக நடாத்தப்படும் நேர்முக பரீட்சைக்குழுவின் அங்கத்தவராக பல்கலைக்கழகத்தின் பதிவாளர் இருந்தமையால் நான்கு விரிவுரையாளர்களுக்குரிய நியமனம் செல்லுபடியற்றதாக இருந்தது.

(ஐ) பல்கலைக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் புத்தகக் கட்டுனர் பதவியொன்று அங்கீகரிக்கப்படாதிருந்த போதிலும், 2014 யூலை 24 ஆந் திகதிய 638/2014 ஆம் இலக்க கொள்வனவுக் குழு தீர்மானத்தின் பிரகாரம் தற்போது பல்கலைக்கழகத்திற்கு சேவை வழங்கும் நிறுவனத்திடமிருந்து புத்தகப் கட்டுனர் பதவிக்காக இரண்டு ஊழியர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

**4.9 வாகனப் பயன்பாடு**

வாகனங்களிற்காக ஏற்படுத்திக் கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டிய கிலோ மீற்றர் அளவை விட குறைத்து ஓட்டத்தில் ஈடுபடுத்தும் கிலோமீற்றர் அளவிற்கும் கொடுப்பனவு செய்வதும் நிபந்தனையொன்றாகும். அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் போது 05 வாகனங்கள் தொடர்பாக ஓட்டத்தில் ஈடுபடுத்தப்படாத 29,897 கிலோ மீற்றர்களிற்காக ரூபா 914,878 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 05. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2002 மே 24 ஆந் திகதிய பீஎப்/பீஈ.21 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆம் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 – 2018 காலப்பகுதிக்குரிய கூட்டிணைந்த திட்டத்தில் மீளாய்வாண்டில் செயற்படுத்தபட வேண்டியிருந்த 21 செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் முன்னைய மூன்று ஆண்டுகளின் செயற்பாட்டு விளைவுகள் தொடர்பாக மீளாய்வொன்று கூட்டிணைந்த திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், நிறைவேற்றப்பட வேண்டிய இலக்குகளின் நிதிப் பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிராமையால் செயல்முன்னேற்றத்தை மதிப்பிடக் கூடிய முறையில் கூட்டிணைந்த திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் போது 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவகத்தின் ஒழுங்கமைப்பு கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் தற்போதுள்ள பதவியணியினர் தொடர்பான விபரங்கள் மற்றும் உள்ளக கணக்காய்வுத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பௌதீக செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்காக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கூட்டிணைந்த திட்டத்தினதும் செயல்நடவடிக்கைத் திட்டத்தினதும் பௌதீக முன்னேற்றத்தை அளவிடுவதற்காகவும் அதற்குரிய தீர்மானங்களை எடுப்பதற்காக தந்திரோபாய முகாமைத்துவ மற்றும் அபிவிருத்திக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும், அக்குழு மாதாந்தம் கூடி செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 5.4 கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2010 திசெம்பர் 14 ஆம் திகதிய 55 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 4 கணக்காய்வு மற்றும்

முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் கூட்டப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 02 குழுக் கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

(ஆ) தற்போது கொள்வனவு செய்யப்பட்டுள்ள கணனி கணக்கீட்டு முறைமையை நாளதுவரையாக செயற்படுத்துதல், கல்விசாரா பதவியணியினரின் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் கடமை கையளிப்பு கடிதங்கள் வழங்குதல், கணக்காய்வு ஐயவினா பதிவேட்டை பராமரித்தல் மற்றும் கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல் போன்றவை தொடர்பாக 32 ஆவது கணக்காய்வு குழுக் கூட்டத்தின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை செயற்படுத்துவதில் தாமதம் அவதானிக்கப்பட்டது.

## 5.5 கொள்வனவுத் திட்டம்

பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமாக இணையத்தளமொன்றும் போதியளவு தகவல் தொழில்நுட்ப வசதிகள் இருந்த போதிலும், கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 9.8 வழிகாட்டியின் பிரகாரம் இலத்திரனியல் கொள்வனவு நடவடிக்கைகள் இலத்திரனியல் மார்க்கமாக செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைககள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மதிப்பிடப்பட்ட செலவினம், உள்ளபடியான செலவினத்துடன் ஒப்பிடப்படுகையில் 05 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 13 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான விலகலும் 07 மூலதனச் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 15 சதவீதம் முதல் 91 சதவீதம் வரையான கருத்திற்கொள்ளப்பட வேண்டிய விலகலும் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் பாதீட்டு மதிப்பீட்டில் ஊழியர் அபிவிருத்தி மற்றும் பட்டப்படிப்பு அங்கிகள் என்பவற்றை கொள்வனவு செய்வதற்கான மூலதனச் செலவினத்திற்காக ஏற்பாடு அங்கீகரித்துக் கொள்ளாமல் முறையே ரூபா 2,782,153 தொகை மற்றும் ரூபா 94,500 தொகையான செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 5.7 தீர்க்கப்படாத கணக்காய்வுப் பந்திகள் தொடர்பான அவதானிப்புகள்

2012 செப்தம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் கணக்கு குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, கழிவு நீர் மீள்சுழற்சி செயற்திட்டத்தினைப் புனரமைப்பதற்கு இதுவரை பல்கலைக்கழகம் தவறியிருந்தது.

## 06. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது பல்கலைக்கழக உபவேந்தரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு
(இ) நிதி முகாமைத்துவமும் செலவினக் கட்டுப்பாடும்
(ஈ) மனித வள முகாமைத்துவம்
(உ) வாகனப் பயன்பாடு